**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 9/2024 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அசோக் குமார். | த–பெ | வேலு |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 35/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | முதன்மை மேலாளர், இந்தியன் வங்கி, காரைக்குடி | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2025**
------------------------------------------------------------------------------------------------

**25.03.2025**

**முதல் விசாரணை :**

**1)** எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. மேற்படி அழைப்பாணையில் குணசுந்தரி என்பவரின் வங்கி கணக்கு எண் பற்றி சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. அழைப்பாணையில் உள்ள வங்கி கணக்கு எண் 920054675 ஆகும். காசோலை எண் 000058 என்பது பற்றி சாட்சியம் அளிக்க கோரப்பட்டுள்ளது. ம.சா.ஆ. 3 ஆவணம் எங்கள் வங்கியிலிருந்து வழங்கப்பட்டது. மேற்படி காசோலை 29.09.2023 ல் எங்கள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது.

2) மேற்படி காசோலையை CTS கிளியரிங் மூலமாக கொடுக்கப்பட்டது. 30.09.2023 அன்று மேற்படி காசோலை Account blocked என்ற தகவலின்படி காசோலை திருப்பப்பட்டது. மேற்படி காசோலை CTS முறையில் தகவல் எங்கள் வங்கிக்கு அனுப்பபட்டு அதன் அடிப்படையில் எங்கள் வங்கிக்கு HDFC வங்கி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. ம.சா.ஆ.2 காசோலையை பொறுத்து ஏற்படும் நடவடிக்கைகள் அந்த வாடிக்கையாளரின் வங்கி கணக்கிற்கு பிரதிபலிக்கப்படும். 01.09.2023 முதல் 30.09.2023 வரையிலான குணசுந்திரியின் வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி **வங்கி கணக்கு பட்டியல் ம.சா.ஆ. 8 ஆகும்.** மேற்படி வங்கி

கணக்கு பட்டியலில் மதிப்பு மறுப்பு செய்யப்பட்டதற்கு வாடிக்கையாளர் கணக்கில் தொகை ரூ. 236 பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) பொதுவாக வாடிக்கையாளரின் வங்கி காசோலையை தவறுதலாக பயன்படுத்துவார்கள் என்ற கருத்து ஏற்படும்போது வங்கி கணக்கை Account blocked என்ற காரணத்தால் வங்கி கணக்கு முடக்கம் செய்யப்படும் என்றால் சரிதான். எங்கள் வங்கியில் இருந்து வழங்கப்பட்ட ரிட்டன் மெமோவிலும் மேற்படி காரணம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாடிக்கையாளரின் வங்கி கணக்கு யாரால் முடக்கம் செய்யப்பட்டது என்றால் HDFC வங்கியால் செய்யப்பட்டுள்ளது. HDFC வங்கியின் வாடிக்கையாளரே கணக்கை பிளாக் செய்திருந்தாலும் இப்படி வரும் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி